©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 26] சென்னை, புதன்கிழமை, ஜூன் 28, 2017
ஆனி 14, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண். 105, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (M1)த் துறை, நாள் 25 மே 2017.*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 112 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 115 ஆம் பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,–

(1) 3 ஆம் விதியின், 3 துணை விதியில், ‘‘விண்ணப்பிக்கப்பட்டதற்கு அனுமதி வழங்கலாம்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "அத்தகைய விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் விண்ணப்பிக்கப்பட்டதற்கு அனுமதி வழங்கலாம்’’ என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(2) 4 ஆம் விதியின், 6 துணை விதியில், ‘‘படிவ எண் 4’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘2 ஆம் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள்’’ என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்;

(3) 7 ஆம் விதியின், 5 துணை விதியில், தொழிற்சாலைகளின் துணைத் தலைமை ஆய்வாளர் உரிமத்தை புதுப்பிக்கலாம்’’, என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘2 ஆம் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் தொழிற்சாலைகளின் துணைத் தலைமை ஆய்வாளர் உரிமத்தை புதுப்பிக்கலாம்’’, என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

**பி. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—26-III-1(a)(T-Sup)